ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2443/54 - 2025 ජූලි මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.07.03

*2443/54 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நகர அபிவிருத்தி நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரான அநுர கருணாதிலக ஆகிய நான், குறித்த சபைக்கு கப்பெடிபொல நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் கப்பெடிபொல நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மேலதிக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை காணப்படுவதனால் இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதற்கு இக்கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

**அநுர கருணாதிலக,**
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

தொடர்பு இல.: MUDH/WS/LA/04/556.
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும்
வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
செஞ்சிறிபாய, கட்டம் II,
பத்தரமுல்லை.
2025, யூன் 30.

1A – G 44735 – 08 (2025/07)
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில், வெலிமடை பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 50 டி, கப்பெடிபொல கிராம அலுவலர் பிரிவில், பாலுகம கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு டீ. சீ. டி. ஹேவகே அவர்களினால் 2025.03.04 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட இலக்கம் 2025/02 திட்டப்படத்தில் துண்டு இலக்கம் A என சுட்டிக்காட்டப்பட்டுள்ள கல்பொக்க ஹேன என்றழைக்கப்படுகின்ற காணியிலிருந்து 0.1012 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கிற்கு : திருமதி. ஜே. டப்ளியூ சந்திரகாந்தி மற்றும் பலர் உரிமை கோருகின்ற காணி மற்றும் இ.கி.வ. இலக்கம் 521 ஆம் வரைபடத்தின் துண்டு இலக்கம் 117 காணிப்பகுதி.

கிழக்கிற்கு : இ.கி.வ இலக்கம் 521 ஆம் வரைபடத்தின் துண்டு இலக்கம் 117 காணிப்பகுதி மற்றும் இலக்கம் B/WLM/2024/570 மேம்படுத்தப்பட்ட வரைபடப் படியெடுப்பின் துண்டு இலக்கம் காணிப்பகுதிகள் A காணிப்பகுதிகள்.

தெற்கிற்கு : திருமதி ஜே. டப்ளியூ சந்திரகாந்தி மற்றும் பலர் உரிமை கோருகின்ற காணி.

மேற்கிற்கு : திருமதி ஜே. டப்ளியூ சந்திரகாந்தி மற்றும் பலர் உரிமை கோருகிறை காணி.

காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் : திருமதி ஜே டப்ளியூ சந்திரகாந்தி
புரசத ஸ்டேதர்ஸ்,
பாலுகம,
கப்பெடிபொல.

EOG 07-0035

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.